இணைப்பு II

[3-ஆம் பக்கத்தில் 348-ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.]

மாநில பின்தங்கிய வகுப்பினர் நல கருத்துரைக்குழு கன்னியா குமரியில் 18—12—1972-ல் நடந்த தனது கூட்டத்தில கீழ்காணும் பரிவுரைகளைச் செய்தது :—

(1) பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்கள், பட்டயக் கணக்கர் (Chartered Accountant) படிப்பு படிக்க வசதிகள் செய்து கொடுக்கப்படலாம்.

(2) ஒழுங்கு தவறி நடக்கும் மாணவர்களுக்குப் பல்வேறு கல்விச் சலுகைகள் மறுக்கப்பட வேண்டும். மாணவர்களின் ஒழுங்கு நடத்தை பற்றி சான்றிதழ்களிலும், மாற்றல் சான்றிதழ் களிலும் எழுதி வைக்கப்பட வேண்டும். அவ்வாறு கல்வி நிறுவன முதல்வர் எழுதி வைத்திருக்கும் நேர்வில், அடுத்து இருக்கும் கல்வி நிறுவனம் அவருக்குக் கல்விப் பயன்களை அளிப்பது பற்றிப் பரிசீலிக்கக்கூடாது. ஒரு பாடத்தில் கூட தேர்ச்சி பெறாத மாணவர் படிப்பு உதவித் தொகையைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

(3) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வுக் குழு நடத்தும் தேர்வுகளை எழுத 40 சதவீத மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும் என்ற விதி முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர் ஆகிய வகுப்பினரைச் சேர்ந்தவர்கள் நேர்வில் தளர்த்தப்பட வேண்டும்.

(4) பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்தவர்கள் குறைந்த அளவு பொதுக் கல்வி தகுதியுடன் அதாவது எஸ்.எஸ்.எல்.சி. தகுதியுடன் அரசுப் பணியில் சேருவதற்கான வயது வரம்பு 26-லிருந்து 28 ஆக உயர்த்தப்பட வேண்டும்.

(5) இராமநாதபுரம் மாவட்டத்தில் மறவர்களின் நிலை பற்றி ஆய்வு செய்ய மாவட்ட ஆட்சித் துணைத் தலைவர் ஒரு நியமிக்கப் பட வேண்டும்.

(6) கருவிகளை இலவசமாக வழங்கும் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாவட்டத்திலும் பயன்பெறுவோர் எண்ணிக்கை 62 பேர்களிலிருந்து 100 பேர்களாக உயர்த்தப்பட வேண்டும்.

1973 ஏப்ரல் 5]

(7) கலைகள்-கைவினைத்தொழில் கல்லூரியில் "சிற்பக்கலை" பிரிவு ஒன்று தொடங்கப்பட வேண்டும்.

(8) சித்த மருத்துவ முறையிலும் சிற்பக் கலையிலும் கைதேர்ந்தவர்கள், இந்திய முறையினை வெளிநாடுகளில் பரப்புவதோடு வெளிநாட்டு தொழில்முறைகளை அறிந்துகொள்ள கலாச்சாரத் திட்டத்தின்கீழ் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட வேண்டும்.

(9) பண்டைய கால நினைவுச் சின்னங்களைப் புதுப்பித்து அவற்றைப் பாதுகாக்க இந்து சமய அறக்கட்டளை வாரியத்தில் ஆஸ்தான ஸ்தபதிகள் நியமிக்கப்பட வேண்டும்.

(10) பொற்கொல்லர்களுக்குக் கடன்கள் வழங்கப்பட்டு அவை திரும்ப வசூலிக்க முடியாதபோது அவை தள்ளி விடப்பட வேண்டும்.

(11) பின்தங்கிய வகுப்பினருக்குள்ளேயே கலப்புத் திருமணம் செய்து கொள்வோர்க்குத் தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட வேண்டும்.

(12) பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் "நாஞ்சில் முதலி" சேர்க்கப்பட வேண்டும்.

(13) மாணவர் விடுதிகளுக்கு அரிசி வழங்குமாறு உணவுப் பொருள் வழங்கல் துறை கேட்டுக்கொள்ளப்பட வேண்டும்.

2. மேற்குறிப்பிட்ட 13 பரிவுரைகளில் கீழ்க்கண்டவை குறித்து ஆணைகள் முன்னரே பிறப்பிக்கப்பட்டுள்ளன :—

[ஆஸ்தான ஸ்தபதிகளை நியமித்தல் மேற்கண்ட (9) வது இனம்]

ஆஸ்தான ஸ்தபதிகளை நியமிப்பது அவசியமில்லையென்று அரசு முடிவு செய்துள்ளது.

[தங்கப்பதக்கங்கள் வழங்குதல் மேற்கண்ட (11) வது இனம்]

பின்தங்கிய வகுப்பினருக்குள்ளேயே கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்குத் தங்கப்பதக்கங்கள் வழங்குவது அவசியமில்லை என்று அரசு முடிவு செய்துள்ளது.

[1973 ஏப்ரல் 5

அரசுப் பணியில் சேருவதற்கான வயது வரம்பை உயர்த்துதல். (4-வது இனம்).—இக்கருத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லையென்று அரசு முடிவு செய்துள்ளது.

ஏனைய கருத்துக்கள் பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

இணைப்பு

[156-ஆம் பக்கத்தில் இனம் 3 (4) க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

L.A. Bill No. 14 *of* 1973.

(As passed by the Assembly)

A Bill further to amend the Madras City Tenants' Protection Act, 1921.

Be it enacted by the Legislature of the State of Tamil Nadu in the Twenty-fourth Year of the Republic of India as follows :—

1. *Short title.*—This Act may be called the Madras City Tenants' Protection (Amendment) Act, 1973.

2. *Amendment of section* 2, *Tamil Nadu Act III of* 1922.—For sub-clause (ii) of clause (4) of section 2 of the Madras City Tenants' Protection Act, 1921 (Tamil Nadu Act III of 1922) (hereinafter referred to as the principal Act), the following sub-clause shall be and shall be deemed always to have been substituted, namely :—

"(ii) includes—

(*a*) any such person as is referred to in sub-clause (i) who continues in possession of the land after the determination of the tenancy agreement,

(*b*) any person who was a tenant in respect of such land under a tenancy agreement to which this Act is applicable under sub-section (3) of section 1 and who or any of his predecessors in interest had erected any building on such land and who continues in actual physical possession of such land and building, notwithstanding that—

(1) such person was not entitled to the rights under this Act by reason of the proviso to section 12 of this Act as it stood before the date of the publication of the Madras City Tenants' Protection (Amendment) Act, 1972 (Tamil Nadu Act 4 of 1972), or